

இப்போது வருகிற நமது கடவுள் இதற்கு முன்
சமய சாத்திர புராணங்களில் வந்ததாகச்
சொல்லுகின்ற பலவகைப்பட்ட ஏற்பாட்டுக்
கர்த்தர்கள். மூர்த்திகள், கடவுளர், தேவர்,
அடியார், யோகி, ஞானி
முதலானவர்களில் ஒருவரல்ல.

உண்மைக்கடவுளை
உண்மையன்பால் வழிபாடு செய்து
மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம்
புனைந்துரையேன் பொய்புகலேன்
சத்தியஞ்சொல் கின்றேன்.

**உண்மைசொல்ல வந்தனனே என்று**
**உண்மை சொல்லப் புகுந்தாலும்**
**தெரிந்து கொள்வாரில்லை**

உண்மைக் கடவுள்
APJ.Arul

# உண்மைக் கடவுள்

## சுத்தசன்மார்க்கம்

**வள்ளலார்**

கருணை பதிப்பகம்

அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

APJ.ARUL

| | |
|---|---|
| நூலின் பெயர் | : உண்மைக் கடவுள் |
| ஆசிரியை | : திருமதி.ஏபிஜெ.அருள் |
| வெளியீடு மற்றும் பதிப்பு உரிமை | : கருணை இதழ் - சிறப்பு வெளியீடு<br>34,பூம்புகார் நகர் வடக்கு விரிவாக்கம்,<br>கருணை சபை சாலை, உத்தங்குடி,<br>மதுரை, தமிழ்நாடு - 625 107. |
| அளவு, தாள், படிகள் | : 1 X 8 புல்ஸ்கேப், 5,000 |
| பக்க எண்ணிக்கை | : 62 |
| முதல் பதிப்பு | : 2014 |
| நூலின் விலை | : ரூ.35/- |

**RNI:TNBIL/2010/34670/ENG/TAM/M**

**Postal Regn. No.MA/131/2014 - 2016**



வள்ளலாரின் சுத்தசன்மார்க்க
உண்மை பொது நெறியை
உள்ளது உள்ளபடி அறிந்திட
கருணை இதழ் வாங்கிப்
படிக்க அன்புடன் வேண்டுகிறோம்

**இதழுக்கான ஆண்டு சந்தா - ரூ.50**

**Bank :SBI.,**
**Othakadai, Madurai - 625 107**
**in favour of KARUNAI**
**A/c No. : 31599470881**
**Branch Code : 2246**
**IFSC Code : SBINOOO2246**


**கருணை இதழின் வெளியீடான**
**"உண்மை கடவுள்" சிறப்பு மலருக்கு**
**வாழ்த்துக்களும், நல் ஆதரவும் நல்கி மகிழ்கிறோம்.**

கருணை சபை சாலை அறக்கட்டளை - பதிவு எண்.4/2009
மனை எண்.34, கிரேஸ் ஹால், பூம்புகார் நகர் வடக்கு விரிவாக்கம்
உத்தங்குடி, மதுரை - 625 107. போன் :94876 83114



சாதியு மதமுஞ் சமயமும் பொய்யென
ஆதியி லுணர்த்திய வருட்பெருஞ் ஜோதி - திருஅகவல்



நிறுவநர் மற்றும் முதன்மை நம்பகர்
வெ.இராமலெட்சுமி இளங்கோ M.A., (Sociology)
மற்றும் கருணை சபை சாலை நம்பகர்கள்/அன்பர்கள்

நெறி பரப்பும் பணிக்கு உதவுங்கள்.

Bank **I.O.B.,** Arignar Anna Nagar, Madurai - 20.
in favour of **KARUNAI SABAI SALAI TRUST**
**A/c. No.065101000031157**
**Branch Code : 0651**

# உண்மைக் கடவுள்

## சுத்தசன்மார்க்கம்

வள்ளலார்

கருணை பதிப்பகம்


அருட்பெருஞ்ஜோதி அருட்பெருஞ்ஜோதி
தனிப்பெருங்கருணை அருட்பெருஞ்ஜோதி

APJ.ARUL



## இயற்கை விளக்கம்

**சமரச சுத்த சன்மார்க்க சத்திய ஞானசபை**
**வடலூர்**
**25-01-1872**



## புலை கொலை தவிர்த்தோர்
## உள்ளே புகுதல் வேண்டும்


**- வள்ளலார்**

## இயற்கை உண்மை

**தனித் தலைமைப் பெரும்பதியாகிய**
**பெருங்கருணை கடவுள்**

## இயற்கை இன்பம்

**சமரச சுத்த சன்மார்க்க சத்தியச்சங்கம்.**
**சமரச சுத்த சமன்மார்க்க சத்திய தருமசாலை.**
**கருணை நெறி. சிற்றம்பலக் கல்வி.**
**சாகாமல் ஓங்கும் ஒளிவடிவம்**






| வ.எண். | பொருளடக்கம் | பக்க எண். |
|---|---|---|
| 1. | நாம் வணங்க வேண்டிய கடவுள் யார்? | 1 |
| 2. | "நாம் வணங்கும்" கடவுள் என்ன செய்கிறார் எனக் கருத வேண்டும்? | 1 |
| 3. | கடவுளை நாம் எங்ஙனம் வழிபாடு செய்ய வேண்டும்? | 1 |
| 4. | கடவுளிடத்தில் நாம் வேண்ட வேண்டியது என்ன? | 2 |
| 5. | இங்கு நாம் உணர வேண்டிய "அந்த உண்மை" என்ன? | 2 |
| 6. | நாம் யார்? | 2 |
| 7. | பிறவி வர்க்கங்கள் | 3 |
| 8. | (இந்நிலையிலுள்ள) நாம் இறைவனிடத்தில் வைக்க வேண்டிய விண்ணப்பம் | 4 |
| 9. | இயற்கை | 4 |
| 10. | சுத்த சன்மார்க்க ஒழுக்கம் | 5 |
| 11. | நாம் எதற்காக உண்மைக் கடவுளை அறிந்து தொழ வேண்டும்? | 7 |
| 12. | சுத்த சன்மார்க்கத்தின் மரபுகள் | 7 |
| 13. | இயற்கை உண்மை அறிய, இயற்கை விளக்கம் பெற, இயற்கை இன்பம் அடைந்திட நாம் என்ன செய்ய வேண்டும்? | 9 |
| 14. | வள்ளலார் செய்த சத்தியம் | 9 |
| 15. | நமக்கு துணையாக எவரேனும் உண்டா? | 10 |

| வ.எண். | பொருளடக்கம் | பக்க எண். |
|---|---|---|
| 16. | எதற்காக ஆண்டவரை உள்ளபடி உணர்ந்து அனுபவிக்க வேண்டும். | 12 |
| 17. | திருவருள் தயவால் அருளப்படுபவை யாவை? | 14 |
| 18. | உண்மைக் கடவுளின் இருப்பிடம், உருவம், செய்கை என்ன? | 15 |
| 19. | எந்த சாதனத்தால் இறைவனின் நிலையை, அருளை காண,பெற முடியும்? | 18 |
| 20. | நமது தொழிலும் கடமையும் எது? | 20 |
| 21. | ஆறாவது அறிவு | 21 |
| 22. | நல்ல விசாரணை என்றால் என்ன? | 23 |
| 23. | முந்தைய சமய, மத மார்க்கங்களும் சுத்த சன்மார்க்கமும். | 24 |
| 24. | கடவுள் எப்படியிருக்கிறார்? | 31 |
| 25. | கடவுளை எந்த அறிவைக் கொண்டு அறிய வேண்டும்? | 32 |
| 26. | அனைத்தும் தத்துவங்களே! | 35 |
| 27. | "வினை" சுத்தசன்மார்க்கத்தில் உண்டா? | 36 |
| 28. | ஐம்மலங்கள் எவை? அவற்றை எதனால் வெல்ல முடியும்? | 38 |
| 29. | "இவையா உண்மை கடவுள்"? | 40 |
| 30. | சுத்த சன்மார்க்கப் பாடல்கள் | 45 |
| 31. | ஆசிரியையின் நன்றியுரை | 50 |





# உண்மைக் கடவுள்

## 1. நாம் வணங்க வேண்டிய கடவுள்

"எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக்கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்தல் வேண்டும்".

## 2) "நாம் வணங்கும்" கடவுள் என்ன செய்கிறார் எனக் கருத வேண்டும்?

எல்லா அண்டங்களையும்,
எல்லா உலகங்களையும்,
எல்லா உயிர்களையும்,
எல்லாப் பொருள்களையும்,
மற்ற எல்லாவற்றையும்,
தோற்றுவித்தும்,
விளக்கம் செய்வித்தும்,
துரிசு நீக்குவித்தும்,
பக்குவம் வருவித்தும்,
பலன் தருவித்ததும்மாக உள்ளார்.

## 3) கடவுளை நாம் எங்ஙனம் வழிபாடு செய்ய வேண்டும்?

கருத்தில் கருதியுள்ள உண்மைக் கடவுளை நாம் வழிபாடு செய்யும் முறை நான்காக உள்ளது. அவையாவன;

1) துதித்தும்
2) நினைந்தும்

3) உணர்ந்தும்
4) புணர்ந்தும்,

அனுபவிக்க வேண்டும் என்கிறார் வள்ளலார்.

## 4) கடவுளிடத்தில் நாம் வேண்ட வேண்டியது என்ன?

- "கடவுள் திருவருள்" நமது கருத்தின்கண் வெளிப்பட்டு விளங்க வேண்டும் என்றும்,
- தேவரீர் திருவருளால் நம் அறிவில் "உண்மை"யை உணர்த்தியருள வேண்டும் என்றும், உண்மை கடவுளிடத்தில் நாம் வேண்ட வேண்டும்.

## 5) இங்கு நாம் உணர வேண்டிய "அந்த உண்மை" என்ன?

அந்த உண்மை;

நம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது?
நமக்கு மேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது?
என்ற உண்மையை உணரவேண்டும்.

## 6) நாம் யார்?

அஞ்ஞான இருளில்
அஞ்ஞான உருவில்
அஞ்ஞானிகளாய்
அஞ்ஞானத்தில் பயின்று
ஏதும் தெரியாது கிடந்தவர்களே நாம்





அதாவது அறிவென்பது ஓர் சிறிதுந் தோற்றாத அஞ்ஞானமென்னும் பாசாந்தகாரத்தில் நெடுங்காலம் "சிற்றணுபசுவாகி" அருகி கிடந்தவர்களே நாம்.

அங்ஙனம் கிடந்த நம்மை, பவுதிக உடம்பில் 'சிறிதறிவு' தோற்றி விடுத்தவர் இறைவனே.

## 7) பிறவி வர்க்கங்கள்

சிறிதறிவு செலுத்தப்பட்டு மனித தேகத்தை எடுப்பதற்கு முன்பு நாம் எடுத்த பிறவி வர்க்கங்கள் கீழ்வருமாறு;

1) தாவர யோனி வர்க்கங்கள்
2) ஊர்வன, நீர் வாழ்வன யோனி வர்க்கங்கள்
3) பறவை யோனி வர்க்கங்கள்
4) விலங்கு யோனி வர்க்கங்கள்
5) தேவயோனி வர்க்கங்கள்
6) நரக யோனி வர்க்கங்கள்

'சிறிது அறிவு' விளங்கச் செய்யப்பட்ட நாம், அதாவது மனிதர்களாகிய நாம்,

அறிவே வடிவாய்,
அறிவே உருவாய்,
அறிவே பொறியாய்,
அறிவே மனமாய்,
அறிவே அறிவாய்,
அறிவே அனுபவமாய்,
அனுபவிக்க தெரிந்திருக்க வேண்டும்" ஆனால், நாமோ
குற்றமே வடிவாய்
குற்றமே உருவாய்
குற்றமே பொறியாய்

குற்றமே மனமாய்
குற்றமே அறிவாய்
குற்றமே அனுபவமாய்

அனுபவிக்கின்ற சிறியவர்களாக உள்ளோம் என்கின்றார் வள்ளலார்.

### 8) (இந்நிலையிலுள்ள) நாம் இறைவனிடத்தில் வைக்க வேண்டிய விண்ணப்பம்

"தேவரீர்,

தங்கள் அற்புதத்திருவருள் விளக்கத்தால், எங்களையும், இவ்வுலகத்தில் இத்தேகத்தை பெற்ற மற்றவர்களையும்

உண்மை அடியர்களாக்கி,
உண்மையறிவை விளக்கி,
உண்மை இன்பத்தை அளித்து,
சுத்த சன்மார்க்கநிலையில் வைத்து,
சத்திய வாழ்வை யடைவித்து,
நித்தியர்களாக்கி வாழ்வித்தல் வேண்டும்".

எனத் தாழும் குணத்துடன் கடவுளிடத்தில் விண்ணப்பம் நாம் செய்ய வேண்டும் என்கிறார் வள்ளலார்.

### 9) இயற்கை

கடவுள் யார்? என்பதற்கு நமது சிற்றறிவிலிருந்து பதில் கிடையாது. ஆனால், சுத்த சன்மார்க்கத்தில் யாரை கடவுளாக நமக்கு காட்டப்பட்டுள்ளது என்ற கேள்விக்கு பதில் யாதெனில்;





"ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மை அன்பால் கருத்தில் கருதி வழிபாடு செய்தல் வேண்டும்" என்பது தான்.

அன்பர்களே, இந்த இடம் மிக முக்கிய இடமாகும். அதாவது "கடவுள் உண்டா?" என்றொரு சந்தேகத்திற்கு இடமின்றி, ஒரு சக்தி உண்டென்றும், அந்த சக்தியின் (கடவுளின்) நிலையை அறிவதற்கு நம் அறிவு விருப்பம் கொண்டுள்ளது. அதாவது,

இயற்கை உண்மை
இயற்கை விளக்கம்

இவைபற்றி அறிய "நல்ல விசாரணை"யை நாம் செய்யத் தயாராக உள்ளோம். இயற்கை உண்மை அது கடவுளின் உண்மை. இயற்கை விளக்கம் அது கடவுளின் விளக்கம் ஆகும்.

### 10) சுத்த சன்மார்க்க ஒழுக்கம்

மேற்படியான இயற்கை உண்மை மற்றும் இயற்கை விளக்கத்தை, நாம் எதற்கு பெற வேண்டும்?

அன்பர்களே, மனிதனும் விலங்கும் ஐந்தறிவு உயிரினங்களே அப்படியெனில், ஆறாவது அறிவு எது ?

"உண்மையறிந்து விளக்கம் பெறுதலே" ஆறாவது அறிவு ஆகும்.

இந்த ஆறாவது அறிவை பெறும் தகுதி படைத்த ஒரே தேகம் "மனித தேகம்" ஆகும்.

ஆறாவது அறிவால் நாம் பெறும் பயன் என்ன? வரம் எது? என வினவினால், அது பெரும் பயனாகிய "மரணமில்லா பெருவாழ்வே" ஆகும்.

ஆம். அது "சாகாத வரமே."

இதுவே "இயற்கை இன்பம்" ஆகும்.

இதற்கு, ஆண்டவரிடத்தில் "உண்மை அன்பு" என்ற உணர்ச்சி நமக்கு ஏற்பட வேண்டும் என்கிறார் வள்ளலார்.

"உண்மை அன்பு" என்ற உணர்ச்சி நமக்கு ஏற்படுவதற்கு நாம் என்னச் செய்ய வேண்டும்?

"உண்மை அன்பு" ஏற்படுவதற்கு நன்முயற்சி செய்யவேண்டும் அதுவும் விசேஷ நன்முயற்சி சிறப்பாகும்.

"உண்மை அன்பு" ஏற்படுவதற்கு நம்மிடம் ஒழுக்கத்தை நிரப்பிக்கொள்ள வேண்டும் என்கிறார் வள்ளலார்.

இங்கு "ஒழுக்கம்" என்பது சுத்த சன்மார்கக ஒழுக்கம் ஆகும்.

சுத்த சன்மார்க்க ஒழுக்கம் என்பது;

"இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள்; எல்லாப் பற்றுக்களுக்கும் காரணமான ஆசார வகைளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்".

ஆக,

1) சத்திய அறிவால் அறியப்படக்கூடிய "உண்மைக் கடவுளையே" தொழ வேண்டும்.





2) எல்லா பற்றுகளுக்கும் காரணமான "ஆசாரங்களை" விட்டு ஒழிக்க வேண்டும்.

இதுவே சத்தியம், சத்தியம், சத்தியம், என அறிவிக்கிறார் வள்ளலார்.

## *11) நாம் எதற்காக உண்மைக் கடவுளை அறிந்து தொழ வேண்டும்?*

நித்திய வாழ்வாகிய, என்றும் அழியாத, பேரின்ப சித்தியை இப்பிறவியிலேயே பெறுவதற்காகத்தான் உண்மைக் கடவுளின் நிலை கண்டு தொழ வேண்டும்.

- இதுவே இறையருள் ஆகும்
- இதுவே ஆறாம் அறிவின் பயன் ஆகும்.
- இதுவே தேக வர்க்கங்களின் முடிபு ஆகும்.

மொத்தத்தில் இதுவே; அவையாவன:-
இயற்கை உண்மை
இயற்கை விளக்கம்
இயற்கை இன்பம் ஆகும்.

## *12) சுத்த சன்மார்க்கத்தின் மரபுகள்*

- உண்மை கடவுளையே தொழுதல்
- எல்லா பற்றுகளுக்கும் காரணமான ஆசாரங்களை விட்டு ஒழித்தல். "அன்பர்களே, இதுவே வள்ளலார்

கண்ட உண்மை ஆகும். இதன் அடிப்படையில் சுத்தசன்மார்க்கத்திற்கு மரபுகள் நான்கு.

அவையாவன;

ஆதாரப் பாடல் எண்: 1369

சாகாத கல்வியே கல்விஒன் றேசிவம்
தான்என அறிந்த அறிவே
தகும்அறிவு மலம்ஐந்தும் வென்றவல் லபமே
தனித்தபூ ரணவல்லபம்
வேகாத காலாதி கண்டுகொண் டெப்பொருளும்
விளையவிளை வித்ததொழிலே
மெய்த்தொழில் தாகும்இந் நான்கையும் ஒருங்கே
வியந்தடைந் துலகம்எல்லாம்
மாகாத லுறஎலாம் வல்லசித் தாகிநிறை
வானவர மேஇன்பமாம்
மன்னும்இது நீபெற்ற சுத்தசன் மார்க்கத்தின்
மரபென் றுரைத்தகுருவே....

**சுத்த சன்மார்க்க மரபுகள் இவையே என வள்ளலாருக்கு ஆண்டவரே உரைக்கிறார் அதை ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமையால் வள்ளலார் நமக்கு தெரியப்படுத்தினார்கள்.**

**(இவ்விடத்தில் நாம் பணிந்து நெகிழ்ந்து நம் நன்றிகளை திருஅருட்பிரகாச வள்ளலாருக்கு தெரிவிப்போம்.)**





## *13) இயற்கை உண்மை அறிய, இயற்கை விளக்கம் பெற, இயற்கை இன்பம் அடைந்திட நாம் என்னச் செய்ய வேண்டும்?*

நாம் "நல்ல விசாரணை செய்ய வேண்டும். மேற்படி நல்ல விசாரணையில் நாம் உள்ளழுந்தி, சிந்தித்து, சிந்தித்தலையே விசாரித்தல் வேண்டும் என்கிறார் வள்ளலார்.

## *14) வள்ளலார் செய்த சத்தியம்*

அன்பர்களே! திருஅருட்பிரகாச வள்ளலார் நம்மிடம் சத்தியம் செய்து சொல்வது என்னத் தெரியுமா?

"வம்மின் உலகியலீர், மரணமிலாப் பெருவாழ்வில் வாழ்ந்திடலாம் கண்டீர். புனைந்துரையேன், பொய்புகலேன் சத்தியஞ் சொல்கின்றேன். பொற்சபையில் சிற்சபையில் புகுந்தருணம் இதுவே. புகுந்தருணம் இது கண்டீர் நம்மவரே நான்தான் புகழ்கின்றேன் என்மொழி ஓர்பொய்மொழி எண்ணாதீர்"

ஆக வள்ளலார் நம்மிடம் சத்தியம் செய்து அறிவித்தது; "மரணமில்லா பெருவாழ்வில் நாம் வாழ்ந்திடலாம்" என்பதைத் தான்.

## ✧ 15) கடவுளை எங்ஙனம் வழிபாடு செய்தல் வேண்டும்? நமக்கு துணையாக எவரேனும் உண்டா? ✧

மேற்படி கேள்விக்கு பதில்;

"உற்றவரும், பெற்றவரும், பிறரும், உடைமைகளும், உலகியலும், உற்றதுணை அன்றே" என்கிறார் வள்ளலார்.

இறைநிலையை அறிய இறைவனே துணை என்பதை நாம் இங்கு சத்தியமாக அறிய வேண்டும். எனவே ஆண்டவனின் நிலையறிய அவர்தம் துணையையே தான் நாம் பக்தியோடு பணிந்து வேண்டுதல் வேண்டும்.

வள்ளலார் கீழ்வருமாறு பக்தியோடு பணிந்து உரைக்கிறார்கள்.

"மிகுந்த சுவைக் கரும்பே, செங்கனியே, கோந் தேனே, மெய்ப்பயனே, கைப்பொருளே, விலையறியா மணியே, தகுந்த தனிப் பெரும்பதியே, தயாநிதியே, கதியே, சத்தியமே."

மேலும், **வள்ளலார் கீழ்வருமாறு கணிந்துளத்தே கனிந்து நினைந்துரைக்கிறார்.**

"பரம்பரமே, சிதம்பரமே, பராபரமே, வரமே, துணிந்து வந்த வேதாந்த சுத்த அனுபவமே, துரியமுடி அனுபவமே, சுத்த சித்தாந்த மதாய்த் தணிந்தநிலைப் பெருஞ்சுகமே, சமரச சன்மார்க்க சத்தியமே இயற்கையுண்மைத் தனிப்பதியே" என்கிறார்கள்.





அன்பர்களே!

மேற்படியாக பத்தியொடு பணிந்து, கணிந்துளத்தே கனிந்து நினைத்துரைத்திடில் **அப்பொழுதே காணாத காட்சி எலாம் கண்டு கொளல் ஆமே!** என்கிறார் வள்ளலார்.

நிற்க! அன்பர்களே, இந்த இடம் மிகவும் முக்கியமான இடமாகும்.

மேலும் மிக முக்கியமாக மற்றொன்றையும் நமக்கு குறிப்பிட்டு சொல்கிறார்கள்.

அஃது யாதெனில்;

"கண்டதெலாம் அநித்தியமே
கேட்டதெலாம் பழுதே
கற்றதெலாம் பொய்யே
நீர் களித்ததெலாம் வீணே
உண்டதெலாம் மலமே
உட்கொண்ட தெலாம் குறையே
உலகியலீர் இதுவரையும் உண்மையறிந்திலிரே"

என்கிறார் வள்ளலார். மேலும்,

சாதியும், சமயமும், மதமும் பொய்யென (211)
ஆதியில் உணர்த்திய அருட்பெருஞ்ஜோதி (212)
சாதியும், மதமும் சமயமும் காணா (115)
ஆதிய நாதியா மருட்பெருஞ்ஜோதி (116) மற்றும்
உரைநடைப் பகுதி பக்கம் 411–ல்;

"சுத்த சன்மார்க்கத்தின் முக்கியத் தடைகளாகிய சமயம், மதம் முதலிய மார்க்கங்களை முற்றும் பற்றறக் கைவிட்டவர்களும், காம, குரோதம் முதலியவைகள் நேரிட்ட காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்பவரும்,

கொலை, புலை தவிர்த்தவர்களும் ஆகிய இவர்கள் தான் சுத்த சன்மார்க்கத்துக்கு உரியவர்கள் ஆவார்கள்."

மேலும், எக்காலத்தும் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய தடையாகிய சமயங்கள், மதங்கள் மார்க்கங்கள், என்பவற்றின் ஆசார சங்கற்ப விகற்பங்களும் வருணம் ஆசிரமம் முதலிய உலகாசார சங்கற்ப விகற்பங்களும், எங்கள் மனத்திற் பற்றாத வண்ணம் அருள் செய்தல் வேண்டும்" என கடவுளிடத்தில் விண்ணப்பிக்க சொல்கிறார் வள்ளலார்.

ஆக, அன்பர்களே,

உண்மைக் கடவுளை கருத்தில் கருதி அக்கடவுளை உண்மை அன்பால் வழிபாடு செய்வதற்கு முன்பு, உலகில் காணும் சமய, மத, (மார்க்கங்களில்) சாதிகளில் லட்சியம் வையாது, அவற்றின் ஆசாரங்களை விட்டொழித்து பொது நோக்கத்தை வருவித்துக் கொண்டு நம்மை சுத்த சன்மார்கக நெறிக்கு தகுதியாக்கிக் கொள்ள வேண்டும் என்பதை ஒவ்வொருவரும் சத்தியமாக தெரிந்திருக்க வேண்டும்.

## 16) எதற்காக ஆண்டவரை உள்ளபடி உணர்ந்து அனுபவிக்க வேண்டும்?

ஒரு பதார்த்தத்தை அனுபவித்தாலல்லது அந்த பதார்த்தினுடைய ருசி தெரியாது. ருசி தெரியாத பதார்த்தத்தின் மேல் இச்சை போகாது. அதுபோல், தெய்வத்தை உள்ளபடி அனுபவித்தாலல்லது தெய்வத்தினிடத்தில் பிரியம் வராது. ஆதலால் தெய்வத்தைத் தெரிந்து கொள்ள வேண்டும் என்கிற முக்கிய





லட்சியத்திலிருந்து கொண்டு விசாரம் செய்துகொண்டிருங்கள் என்கிறார் வள்ளலார்.

அற்புதம், அற்புதம், அற்புதம்.

ஆம் அன்பர்களே!

1) சத்திய அறிவால் அறியப்படும் கடவுள் "ஒருவரே" எனக் கருத்தில் கொண்டோம்.

2) கடவுள் நிலையறிய காலம் தாழ்த்தாது இடைவிடாது நன்முயற்சியில் உள்ளழுந்தி, அதைச் சிந்தித்து சிந்தித்தலே விசாரித்தலில் பழகிவிட்டோம்.

➢ இன்று தெய்வத்தை உள்ளபடி அறிந்து அனுபவித்தலுக்கு, நாம் தயாராகி உள்ளோம்.

➢ எல்லா பற்றுக்களும் காரணமான ஆசாரங்களை விட்டொழித்து, திருவருளால் சுத்த சன்மார்க்கத்தின் முக்கிய லட்சியமாகிய ஆன்மநேய ஒருமைப்பாட்டுரிமை நம்முள் எக்காலத்தும் எவ்விடத்தும் எவ்விதத்திலும் எள்ளளவும் விலகாமல் நிறைந்து விளங்கும் என்பதில் நம்பிக்கை கொண்டோம்.

➢ சாகா கல்வியே கல்வி என அறிந்தோம்.

➢ பொது நோக்கத்தை பெற்றுள்ளோம்.

➢ திருவருளால் மரணம் பிணி மூப்பு பயம், துன்பம் முதலிய அவத்தைகளை தவிர்த்துக் கொண்டு நித்திய வாழ்வை இனி பெறுவோம்.

## 17) திருவருள் தயவால் அருளப்படுபவை யாவை?

அன்பர்களே!

சுத்தசன்மார்க்கத் தனிநெறி ஒன்றிலே நாம் பற்று வைப்பதால், திருவருள் தயவால் அருளப்படுபவை எவை என வள்ளலார் கீழ்வருமாறு பட்டியலிடுகிறார்கள்.

- நமக்கு எவ்விதத்தும் அறிதற்கரிய **உண்மைப் பேரறிவு** அறிவிக்கப்படுகிறது.
- நமக்கு எவ்விதத்தும் காண்பதற்கரிய **உண்மைப் பெருங்காட்சிகளைக்** காட்டுவிக்கப்படுகிறது.
- எவ்விதத்தும் செய்தற்கரிய **உண்மைப் பெருஞ்செயல்களை** நாம் செய்விக்க அருளப்படுகிறோம்.
- எவ்விதத்தும் அடைதற்கரிய **உண்மைப் பெருநன்மைகளை** நாம் அடைகிறோம்.
- எவ்விதத்தும் அனுபவித்தற்கரிய **உண்மைப் பேரனுபவங்களை** நாம் அனுபவிக்க அருளப்படுகிறோம்.
- இங்ஙனமாக நமது அகத்தினும், புறத்தினும் இடைவிடாது காத்தருளி நமது உள்ளத்திலிருந்து உயிரிற் கலந்து பெருந்தயவால் திருநடஞ் செய்தருளுபவரே கடவுள்.





## 18 ) உண்மைக் கடவுளின் இருப்பிடம், உருவம், செய்கை என்ன?

அன்பர்களே,

இது மிகவும் முக்கியமான இடம்

சுத்த சன்மார்க்கத்தில் நமக்கு காட்டிய கடவுள் யாதெனில்; "எங்கும் பூரணராகி விளங்குகின்ற ஓர் உண்மைக் கடவுள் உண்டென்றும், அக்கடவுளை உண்மையன்பாற் கருத்திற் கருதி வழிபாடு செய்யின், அக்கடவுள் திருவருள் நமக்கு கருத்தின் கண் வெளிப்பட்டு விளங்குமென்றும்" நமக்கு வள்ளலாரால் தெரிவிக்கப்பட்டுள்ளது.

என் மார்க்கத்தில் "அக அனுபவமே" உண்மை ஆகும் என்கிறார் வள்ளலார்.

என் மார்க்கம் "அறிவு மார்க்கம்" இந்நிலையில் நாம் எங்ஙனம் கடவுளின் இடம், ரூபம், செய்கைளைப் பற்றிப் படிப்பினால் தெரிந்து கொள்ள முடியும்?

உலகில் காணும் சமய, மத மார்க்கங்கள் நமக்கு இதுவே கடவுள், இவையே சம்பிரதாயங்கள், இங்ஙனமே முடிவு என வியம்புகின்றன. இவ்வாறு கட்டுப்பாடு விதிக்கப்பட்ட சமய, மத மார்க்கங்களில் நம் அறிவிற்கு வேலையில்லை.

திருஅருட்பிரகாச வள்ளலார் தான் கண்ட கடவுளின் உண்மை (திருவுருவம்)கடவுளின் விளக்கம் (இருப்பிடம்) கடவுள் அருள் (செய்கை) இவை குறித்து அவர்பாடிய பாடல்களில், உபதேசக்குறிப்புகளில் மற்றும்

விண்ணப்பங்களில் உள்ளவற்றை உள்ளபடி இங்கு காண்போம்.

அன்பர்களே! விண்ணப்பங்கள், உபதேசக் குறிப்புகள், சுத்த சன்மார்க்கப்பாடல்கள் மூலம் பதிவிளக்கத்தை இங்கு காணும் நாம் எந்தவொரு அனுபவத்தையும் பெற்றிட முடியாது என்பதை சத்தியமாக தெரிந்திடுவோம்.

அவாவின் வெளிப்பாட்டிலேயே படிக்க உள்ளோம். கடவுள் நிலை படிப்பினால் அறியக்கூடியதல்ல என்ற வள்ளலாரின் சத்திய வாக்கியத்தினை இங்கு நினைவில் கொள்வோம். பின் எதற்காக இதை படிக்க வேண்டும்? என்பவர்கள் இப்பகுதியை விட்டுவிட்டு நல்லொழுக்கத்தை நிரப்பி இடைவிடாது நன்முயற்ச்சியை காலம் தாழ்த்தாது இப்பொழுதே தொடங்கிவிடுங்கள்.

அதே நேரத்தில் வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம் ஒரு தனி நெறியை கொண்டிருக்கவில்லை. மற்ற சமய, மத மார்க்கங்களில் வெளிப்படுத்தப்பட்டுள்ள கடவுள் தேவர் கர்த்தர் முதலிய இவர்களில் ஒருவரையே வள்ளலார் ஆண்டவராக காட்டுகிறார் என்ற விவாதத்திற்கு இப்பகுதி விடையளிக்கிறது.

1) கடவுளின் சொரூபம்,

2) கடவுளின் இடம்,

3) கடவுளின் செய்கை

என்பவற்றிற்கான முடிபை அவ்வரிசையிலேயே காண்போம்.

அவைமுறையே;

1) இயற்கை உண்மை





2) இயற்கை விளக்கம்

3) இயற்கை இன்பம்

மேலும் முறையே;

1) சுத்த சிவானுபவவெளி

2) அருட்பெருஞ்ஜோதி சொரூபம்

3) ஓங்கிய சிவானந்த ஒருமைத்திருநடம்

மேலும் முறையே;

1) திருவுருவம்

2) சத்திய ஞானசபை

3) திருநடச் செய்கை

அதாவது,

"ஓர் சுத்த சிவானுபவ வெளியில், சத்திய திருவுருவாம் அருட்பெருஞ்ஜோதி சொரூபராய், சத்திய ஞானசபைக் கண்ணே எல்லா உயிர்களும் இன்பமடைதற்பொருட்டு சத்திய திருநடச்செய்கை"

இதுவே நடந்தது, நடந்துக்கொண்டேயிருக்கிறது.

அன்பர்களே!

இறைவன் விளங்குகின்ற நிலையை வள்ளலார் கீழ்வருமாறு குறிப்பிடுகிறார்கள்;

"எல்லாச் சத்திகளும்,
எல்லாச் சித்தர்களும்,
எல்லாத் தலைவர்களும்,
அறிந்து கொள்ளுவதற்கு மிகவும் அரியதாய்,
எல்லாத் தத்துவங்களுக்கும்
எல்லாத் தத்துவிகளுக்கும்

அப்பால் அப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞான வெளியில் தமக்கு ஒரு விதத்தாலும் ஒப்புயர்வு சிறிதும் குறிக்கப்படாத தனிப்பெருந்தலைமை அருட் பெருஞ்ஜோதியராகி விளங்குகின்றவரே கடவுள்."

வள்ளலார் கண்டு தெரியப்படுத்தியுள்ள இறைவனின் உண்மையை படிப்பினால் அறிந்திட முயற்ச்சிக்கக்கூடாது என்பதை இங்கு நாம் சத்தியமாக தெரிந்து கொள்ள வேண்டும். இறைவனின் திருவுருவம், திரு இடம், திருச்செய்கையை, நாம் உண்மையறிவில் தான் தெரிந்துக் கொள்ள முடியும்.

***19) (பின்பு,) எந்த சாதனத்தால் இறைவனின் நிலையை, அருளை காண, பெற முடியும்?***

அதற்கு 'கருணை' ஒன்றே சாதனம்.
அந்த "கருணை"க்கு ஒருமை வரவேண்டும்.
ஒருமையில் தான் "கருணை" வரும்.
ஆக, இங்கு மிகவும் முக்கியமாக நாம் தெரிந்துகொள்ள வேண்டியது "ஒருமையே"
அன்பர்களே!

இன்று உலகில் காணும் எந்தொரு சமய, மத மார்க்கங்கள் ஆகட்டும், அவையில் நற்குணங்கள், நற்செய்கைகள் மற்றும் கட்டுப்பாட்டு ஆசாரங்கள் உள்ளதை அறிவோம். மேற்படி சமய, மத மார்க்கங்களில் நம்பிக்கை, ஒழுக்கம், பக்தி, அடக்கம், நல்லறிவு தான்





போதிக்கப்படுகிறது. இவையில் வெளிப்படுகின்ற கருத்துக்களின் சாராம்சம் யாதெனில்;

"தன்னால் இதரர்களுக்கு இம்சை இல்லாது, அவர்கள் செய்யினும் தான் சகித்து அடங்கி நிற்பது" ஆகும். இதையே "ஒருமை" என்கிறார்கள்.

ஆனால்,

வள்ளலார் 'ஒருமைக்கு' கண்ட விளக்கம் யாதெனில்;

ஒருமை என்பது;

**"தனது அறிவு ஒழுக்கம் ஒத்த இடத்தில் தானே கூடும்."**

இங்கு தனது அறிவு என்பது அவரவர் பெற்றிருக்கும் அறிவின் அளவு. ஒழுக்கம் என்பது சுத்த சன்மார்க்க ஒழுக்கம் ஆகும்.

சுத்த சன்மார்க்க ஒழுக்கம் என்றால் என்ன என்பதை நாம் ஏற்கனவே பார்த்துள்ளோம். மீண்டும் காண்போம். (இவ்விடம் மிகவும் முக்கியம் என அறிக.)

சுத்த சன்மார்க்க ஒழுக்கம் என்பது;

"இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள் எல்லாப் பற்றுகளுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்"

நிற்க! இந்த சுத்த சன்மார்க்க ஒழுக்கம் நமது அறிவில் "சரியே" எனப்பட்டு, தெளிந்து, உண்மைக் கடவுளை மட்டுமே தொழுதல் வேண்டும். இது வள்ளலார் கண்ட ஒருமையாகும்.

இந்த ஒருமையிலேயே "கருணை" (தயவு/அருள்) வரும். கருணை வந்தால் எல்லா உயிர்களிடத்தும் தயவு வரும் மற்றும் ஆண்டவரிடத்தில் அன்பு வரும். அன்பு வந்தால் நெகிழ்ச்சி உருக்கம் வரும். நெகிழ்ச்சி உருக்கம் வந்தால் "கண்ணீர்" வரும். கண்ணீர் வந்தால் அனுபவம் உண்டாகும். அனுபவத்தில் கடவுள் காட்சி கிடைக்கும். கடவுள் காட்சியில் அருள் பெறலாம். அருளால் மரணமில்லா பெருவாழ்வு பெறலாம்.

இதுவே சத்தியம் சத்தியம் சத்தியம் என்கிறார் வள்ளலார்.

## 20) நமது தொழிலும் கடமையும் எது?

நமது தொழிலும் கடமையும் எது எனப்பார்க்கும் முன்பு வள்ளலார் சொல்லிய உண்மையை மீண்டும் ஒரு முறை காண்போம்.

"இங்கிருக்கின்ற ஒன்றையும் பொருளாகக் கொள்ளாதீர்கள் எல்லாப் பற்றுகளுக்கும் காரணமான ஆசார வகைகளை விட்டுத் தலைவனையே தொழுவீர்கள்" என்ற திருவார்த்தை யதனால் தலைவனைத் தொழுவதே தொழிலாக வுடையது கடமை என்கிறார்கள்.

மேலே சொன்னது "திருவார்த்தை" ஆகும் என்கிறார் வள்ளலார். அதனால் "தலைவனை தொழுவதே" நமது தொழிலும், கடமையும் ஆகும்.





## 21) ஆறாவது அறிவு

அன்பர்களே!

மற்ற உயிர் இனங்களுக்கும் நமக்கும் வேறுபாடு என்ன?

ஓரறிவு முதல் ஐந்து அறிவு அடிப்படையிலேயே உயிர் இனங்கள் வேறுபடுகின்றன.

**ஓர் அறிவு உயிர்**

மெய் அதாவது உடம்பால் ***தொடுதல் உணர்வை*** மட்டுமே உடைய உயிர்கள் ஓர் அறிவு உயிர்கள்.

எடுத்துக்காட்டு : செடி, கொடி, புல், மரம்

**ஈரறிவுயிர் (இரண்டு அறிவு உயிர்)**

மெய் உணர்வோடு, சுவை அறியும் நாக்கு உடையவை இரண்டு அறிவு உடைய உயிர்களாகும்.

எடுத்துக்காட்டு : சிப்பி, சங்கு

**மூவறிவுயிர் (மூன்று அறிவு உயிர்)**

மெய், நாக்கு ஆகியவற்றோடு நாற்றத்தை (வாசனை) அறியும் மூக்கு உடையவை மூன்று அறிவு பெற்ற உயிர்கள்

எடுத்துக்காட்டு: கறையான், எறும்பு

**நாலறிவுயிர் (நான்கு அறிவு உயிர்)**

மெய், நாக்கு, மூக்கு ஆகியவற்றோடு காணும் ஆற்றல்பெற்ற கண் உடைய உயிர்கள் நான்கு அறிவு பெற்றவை.

எடுத்துக்காட்டு: தும்பி, வண்டு

**ஐயறிவுயிர் (ஐந்து அறிவு உயிர்)**

மெய், நாக்கு, மூக்கு கண் ஆகியவற்றோடு கேட்கும் திறனுடைய செவி உடைய உயிர்கள் ஐந்தறிவு பெற்றவையாகும்.

எடுத்துக்காட்டு : விலங்குகள், மனிதர்.

இந்நிலையில் நமக்கும் விலங்குகளுக்கும் உள்ள வேறுபாடு என்ன?

பகுத்தறிவு என்றும், அது, இது, என்றும், பல கோணங்களில் ஆறாம் அறிவு இன்று விவாதிக்கப்படுகிறது. ஆனால் ஒத்த முடிவு இன்று வரை ஏற்படவில்லை. இதற்கு உண்மை விளக்கம் வள்ளலார் கண்ட சுத்த சன்மார்க்கத்தில் காணலாம்.

விலங்கு யோனி வர்க்கங்களெல்லாம் சென்று வந்த நாம் (சிற்றணுப்பசு), இந்த மனித தேகத்தில் சிறிதறிவு தோற்றிவிடுத்த கடவுளின் (இயற்கையின்) பெருங்கருணையை இங்கு உணர வேண்டும் என்கிறார் வள்ளலார்.

நிற்க!

சிறிதறிவு பெற்ற நாம்,

அவ்வறிவை கொண்டு செயல்படாமல்,

புலனறிவால் (ஐந்தறிவால்) மட்டுமே செயல்படுகிறோம்.

ஆறாவது அறிவு என்பது என்ன? எனப்பார்க்கும் போது; அது "உண்மையறிதலே" ஆகும். உண்மையை அறியும் அறிவே ஆறாவது அறிவு ஆகும். உண்மை அறியும் தகுதி படைத்த தேகம் மனித தேகம் மட்டுமே.





மனிதன் "உண்மை"யை அறிவதற்கு "நல்ல விசாரணை" செய்து முயற்சியுடனிருந்தால் தெரிய வேண்டியதைத் தெரிந்துக் கொள்ளலாம் என்கிறார் வள்ளலார்.

மேற்படி ஆறாவது அறிவான உண்மையறிதலுக்கு தேவையானது "நல்ல விசாரணையே" அந்த நல்ல விசாரணைக்கு நமக்கு தகுதியான சாதனமாக உள்ளது கருணையே கருணை என்பதற்கான விளக்கத்தை வள்ளலார் கீழ் வருமாறு தருகிறார்கள்.

கருணை என்பது; எல்லா உயிர்களிடத்தும் தயவும், ஆண்டவரிடத்தில் அன்புமே.

## ✧ 22) நல்ல விசாரணை என்றால் என்ன? ✧

"நல்ல விசாரணை" எதுவென்றால்;

**"நம் நம்முடைய நிலை எப்படிப்பட்டது?**
**நமக்கு மேல் நம்மை அதிஷ்டிக்கின்ற தெய்வத்தினுடைய நிலை எப்படிப்பட்டது?**

என்று விசாரிக்க வேண்டியது என்கிறார் வள்ளலார்.

அவ்விசாரணைக்கு தக்கப்படி,

நீங்கள் ஒருமித்தாவது, அல்லது தனித்தனியாகவாது, உங்களறிவிற்கும், ஒழுக்கத்துக்கும் ஒத்தவர்களுடன் கூடியாவது நல்ல விசாரணையிலிருங்கள்.

## ✧ 23) முந்தைய சமய, மத மார்க்கங்களும் சுத்த சன்மார்க்கமும் ✧

அன்பர்களே!

இந்த அத்தியாயம் மிக மிக முக்கியமான ஒன்று ஆகும்.

மார்க்கம் என்றால் வழி

சன்மார்க்கம் என்றால் சத்மார்க்கம். சத்தென்னும் பொருளின் உண்மையைத் தெரிவிக்கின்ற மார்க்கம்.

நிற்க! உலகில் காணும் சமய மத மார்க்கங்களில் சொல்லப்பட்டுள்ள கர்த்தர், கடவுள், தெய்வங்கள் இவர்களின் நிலையை அறிகின்ற "வழி" என்னவாக உள்ளது? அம்மார்க்கங்களில் கடவுள் நிலையை கண்டு அக் கடவுள் அருளைப் பெற்றவர்களாக உள்ளவர்கள் "யோகி" களே.

அந்த யோகிகள் எந்த வழியில் கடவுள் அருளைப் பெற்றார்கள்? என்பதே முக்கியமாக நாம் இங்கு சிந்திக்க வேண்டும்.

அந்த வழி, "தவமே". தவத்திற்கான இடங்கள்; வனம், மலை, முழை அதற்கு தேவைப்படும் கால அளவு; நூறு, ஆயிரம் முதலிய வருஷகாலம். மேற்படி தவத்தில் யோகிகள் செய்தது;

- ➢ சில மந்திர வாசக பதவர்ணாதிகள் விந்து, நாத, ஓம், ஹரி, சச்சிதானந்தம், ஜோதியுள் ஜோதி, சிவாயநம, நமச் சிவாய உட்பட பல பரிபாஷைகள் மூலம்
- ➢ தத்துவங்களை உபாசித்தும், அர்ச்சித்தும்,





- ➢ தத்துவாதீதத்தைத் தியானித்தும் இடையில் ஜபித்தும்
- ➢ கரணலயமாகச் சமாதி செய்தும்
- ➢ தத்துவச் சேட்டைகளை அடக்க விரதமிருந்தும்
- ➢ சாதாரண யோகபாகத்தில் மூச்சடக்கியும் செய்தார்கள்.

நிற்க!

மேற்படியான வழிவகைகளே சமய, மத சன்மார்க்கங்களில் உள்ளன. அந்தந்த யோகிகள் தங்கள் அனுபவத்தில் தெரிந்துக் கொண்ட உண்மையளவில் (அவர்களால்) பல சமய, மத சன்மார்க்கங்களை அவர்கள் ஏற்படுத்தினார்கள்.

அச்சமய, மத மார்க்கங்களில் நம் நிலை என்ன?

மேற்படி யோகிகளால் வெளிப்படுத்தப்பட்ட கடவுள், கர்த்தர், ஆண்டவர், தெய்வங்களை வணங்குதலே நம் நிலையாக உள்ளதே அன்றி அக்கடவுளின் நிலையறியும் உரிமையோ தகுதியோ அங்கு நமக்கு இல்லை.

சில மார்க்கங்களில் யோகிகளையே தெய்வங்களாக, குமாரனாக, தூதுவராக ஏற்றுள்ளோம்.

நிற்க! தவநிலையை யோகிகள் போன்று மனுஷ்ய தரத்தில் நம்மால் செய்ய முடியாது. சாதாரண மனுஷத்தரத்தில் நாம் வாழ்கிறோம்.

அன்பர்களே!

இறைவன் உண்டு.

இறைவன் மிகப்பெரியவன்

இறைவனே நம்மையும் உலகங்களையும் படைத்தான் என்ற உண்மைகள் யோகிகளால் வெளிப்படுத்தப்பட்டு அந்த இறைவனை வணங்குதல் வேண்டும் என்றுதான் நாம் பணிக்கப்பட்டுள்ளோம். யோகிகளின் அனுபவ கால அளவு கணக்கில் அடங்காது. அனுபவங்கள் பலவிதம், அவை உண்மையுடனும், திரித்தும், புனைந்தும் மற்றும் முழு கற்பனையாலும் மாற்றப்பட்டு நமக்கு பல புராணங்களாகவும் இதிகாசங்களாகவும் தரப்பட்டுள்ளது.

நிற்க!

➢ இங்கு நம் அறிவு எதை விரும்புகிறது? காட்டப்பட்டுள்ள இறைவனை, கடவுளை, தேவர்களை வணங்குவதிலா?

அல்லது

➢ நமக்கு மேல் அதிஷ்டிக்கின்ற கடவுளின் நிலை எப்படிப்பட்டது என்று அறியும் ஆவலிலா?

அன்பர்களே!

கடவுளின் உண்மை என்ன? உண்மைக் கடவுளை கண்டு அருள் பெறுவது எப்படி? என்று ஆசைப்படும் அறிவுக்கே இவ்விசாரணை மேலும் தொடரப்படுகிறது.

ஆக, சமய, மதங்களில் இறைவனின் நிலை காண உள்ள வழி (தவ வழி) எல்லாருக்கும் (எல்லா மனிதர்களுக்கும்) ஒத்து வராது. அதில் சொல்லப்பட்டுள்ள தியானம், விரதம், மூச்சுப்பயிற்சி, மந்திரங்கள் எல்லாம் எல்லோராலும் செய்யக்கூடியதாக இல்லை. இதனால் வள்ளலார் கடவுள்நிலை குறித்து விஷேச நன்முயற்ச்சியில் தொடர்ந்து இருந்தார்கள். வள்ளலாரின் இந்த இடைவிடாத நன் முயற்ச்சியின் பயனாக அவருக்கு ஆண்டவராலேயே அறிவிக்கப்பட்ட வழியே "சுத்த சன்மார்க்கம்" ஆகும்.





➢ இவ்வழி தனி வழி மட்டுமில்லை. உண்மை பொது வழியாகவும் உள்ளது.

➢ இவ்வழி மற்ற எல்லா வழிகளையும் மறுக்க வந்தது என்கிறார் வள்ளலார்.

➢ இவ்வழியில் எல்லா மனிதர்களாலும் பயணித்து இறையருளை பெறுவதாக உள்ளது.

மனுஷ்யதரத்தில் அமைந்துள்ள உயர்வான "சுத்த சன்மார்க்கம்" சுத்த சன்மார்க்கத்தில் "நல்ல விசாரணை" செய்ய வேண்டும். நல்ல விசாரணை என்பது உலக விசாரம் அல்ல. பரலோக விசாரத்தையே குறிக்கும் என்கிறார் வள்ளலார்.

ஆக, ஆறறிவு உள்ள தேகத்தைப் பெற்ற மனிதர்கள் அனைவருமே கடவுளின் உண்மை நிலையறிந்து அக்கடவுளின் அருளை பெறுதற்கான வழியை கொண்டதே சுத்த சன்மார்க்கம் ஆகும்.

அதாவது; உஷ்ணத்தை தவம் செய்து உண்டு பண்ணிக் கொள்ளுகிறதைப் பார்க்கிலும், தெய்வத்தை தோத்திரம் செய்கின்றதிலும் நினைக்கின்றதிலும் இதைவிடக் கோடிபங்கு பத்து கோடி பங்கு அதிகமாக உஷ்ணம் உண்டு பண்ணிக் கொள்ளலாம்.

எதற்கு உஷ்ணத்தை உண்டு பண்ணிக் கொள்ள வேண்டும்?

ஆன்மாவை தெரியவொட்டாமல் மூடி இருக்கின்ற திரையை விசார அதியுஷ்ணத்தாலல்லது, மற்ற உஷ்ணங்களால் நீக்க முடியாது.

ஆக,

மற்ற சமய, மத மார்க்கங்களுக்கும் சுத்த சன்மார்க்கத்திற்கும் உள்ள முக்கிய வேறுபாடுகள் யாதெனில்;

| மற்ற சமய மத மார்க்கங்கள் | சுத்த சன்மார்க்கம் |
|---|---|
| ➢ இறைவனின் நிலையை காணும் வழி மனுஷ்ய தரத்தில் இல்லை | ➢ சுத்த சன்மார்க்கத்தில் மனுஷ்ய தரத்தில் இறைவனின் நிலையை அறிவதாக உள்ளது. |
| ➢ இறை உண்மையை தெரியவொட்டாமல் மூடி இருக்கின்ற திரைகளை விலக்கும் வழி “பொது” வழியாக இல்லை “யோகி”களின் தரத்திலே உள்ளது. | ➢ இறை உண்மை காணும் வழி உண்மை பொது வழியாக உள்ளது. எல்லா மனிதப் பிறவிகளுக்கும் உரியதாக உள்ளது. |
| ➢ திரைகளை நீக்குவதற்கு வேண்டிய அதியுஷ்ணத்திற்கு” யோகிகள் தவத்தை இங்கு மேற்க்கொள்கிறார்கள். | ➢ “நல்ல விசாரணை” மட்டுமே இங்கு வழியாக உள்ளது. |
| ➢ யோகிகள் வனம், மலை, முழை முதலியவற்றிற்குப் போய் நூறு, ஆயிரம் முதலிய வருஷ காலம் தவம் செய்ய வேண்டியுள்ளது. | ➢ மனத்தில் இக விசாரமின்றிப் பர விசாரிப்புடன் ஆன்ம நெகிழ்ச்சியோடு தெய்வத்தை சிந்தித்துக் கொண்டாவது அல்லது தோத்திரம் செய்து கொண்டாவது இருத்தல் போதுமானது. |





| | |
|---|---|
| காட்டப்பட்ட கடவுளை வணங்குதலும் வழிபாட்டு மற்றும் கட்டுப்பாட்டு ஆசாரங்களும் இங்கு உள்ளது. | கடவுள் உண்மை தெரிய வேண்டுமென நன்முயற்சியுடன் இருக்க வேண்டும். எந்தொரு ஆசாரமும் கிடையாது. கூடாது. |
| ஏகதேச கர்ம சித்திகளை கற்பனைகளாகச் சொல்லி இருக்கின்றார்கள். அவையில் லட்சியம் வைக்கப்படுகிறது. | ஆண்டவரிடத்தில் மட்டுமே லட்சியம் வைக்கப்படுகிறது. ஒவ்வொருவரும் முயற்சியுடனே இருந்தால், அதற்கு தக்க லாபத்தைப் பெற்றுக் கொள்ளலாம். |
| பல வருஷம் பிரயாசை எடுத்துக் கொண்டால் அற்ப சித்திகளை அடையலாம். | கோடி கோடிப் பங்கு அதிகமாக கொடுக்கும் படியான இடம் இந்த இடம் |
| பிண்ட லட்சணத்தை அண்டத்தில் காட்டப்பட்டுள்ளது | “அருள் ஒளியை காண்க” என உரைக்கப்படுகிறது. |
| தெய்வத்திற்கு பெயரிட்டு இடம், வாகனம், ஆயுதம், வடிவம், ரூபம் முதலியவையும் ஒரு மனுஷ்யனுக்கு அமைப்பது போல் அமைத்து உண்மையாக இருப்பதாகச் சொல்லி இருக்கின்றார்கள். | ஒவ்வொருவரின் அக அனுபவத்தில்தான் இறைவனின் உண்மை வெளிப்படுவதாகவே சொல்லப்பட்டுள்ளது. எங்கும் பரிபூரணமாக விளங்கும் ஒரே மெய் பொருளாக்காட்டப் பட்டுள்ளது. |
| வேதம், ஆகமம், புராணம் இதிகாசம் முதலிய கலைகள் உண்டு. | எந்தொரு கலையும் இங்கு இல்லை. |

தெய்வத்தைப் பற்றி புறங்கவியச் சொல்லவில்லை. ஆதலால் இறை உண்மை காண நமக்கு காலமில்லை.

"கருணை " சாதனமாக சொல்லப் பட்டிருப்பினும், ஆசாரங்கள் இருப்பதால் அக்கருணை விருத்தியாகாமல் உள்ளது.

இங்கு முக்தி, சமாதி, மரணம் உண்டு.

காட்டப்பட்ட கடவுளை தொழுதலும் அக்கடவுளிடத்தில் வேண்டுதலுமே நாம் செய்கிறோம்.

சமய, மத மார்க்கங்கள் ஒவ்வொன்றும் ஒன்றிற்கு ஒன்று வேறுபட்டு உள்ளது.

பொறுமை, சாந்தம், அடக்கம், இந்திரிய நிக்கிரகம், ஜீவகாருண்யம் இவையனைத்தும் இதன் இயல்புகள் ஆகும்.

நினைந்து, உணர்ந்து, நெகிழ்ந்து இருப்பின் இப்பிறவிலேயே இறைநிலைக் கண்டு அருள் பெறலாம்.

கருணை விருத்திக்கு தடையாக உள்ள ஆசாரங்களை விட்டொழிக் குமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது.

சாகா கல்வியை தெரிவிப் பதன்றி வேறு ஒன்றுமில்லை.

உண்மை கடவுளின் நிலைக் காண ஒவ்வொருவரும் நல்ல விசாரணை செய்ய வேண்டும்.

மற்ற சமய, மத மார்க்கங்கள் யாவும் சுத்த சன்மார்கத்திற்கு அநந்நியம் ஆனால் அந்நியம் அல்ல.

சுத்த சன்மார்க்கம் சமய, மத மார்க்கங்களின் அனுபவங்களை கடந்தது. இங்கு அக அனுபவமே உண்மை.





## 24. கடவுள் எப்படியிருக்கிறார்?

கடவுள் எப்படி இருக்கிறார்?

கடவுள் ஒளியாக இருக்கிறார்

அவ்வொளி உண்மையறிவில் வெளிப்படுகிறது. ஒவ்வொருவரும் சத்திய அறிவால் உள்ளழுந்தி, சிந்தித்து, சிந்தித்தலை விசாரிக்க வேண்டும். இதுவே சாரசங்கல்பம் ஆகும். இதற்கு விசேஷ நன்முயற்சி வேண்டும்.

கடவுள் பிரகாசம்:

நம்மிடத்தில் (பிண்டத்தில்) மற்றும் அண்டத்திலும், அகம், அகப்புறம், புறம், புறப்புறம் என்கின்ற நாலிடத்திலும் கடவுள் பிரகாசம் உள்ளது.

காரியத்தால் உள்ள விபரம்:-

| | பிண்டத்தில் | அண்டத்தில் |
|---|---|---|
| அகம் | ஆன்மா | அக்கினி |
| அகப்புறம் | ஜீவன் | சூரியன் |
| புறம் | கரணங்கள் | சந்திரன் |
| புறப்புறம் | இந்திரியங்கள் | நட்சத்திரம் |

காரணத்தாலுள்ள இடம்:-

| பிண்டத்தில் | அண்டத்தில் |
|---|---|
| புருவமத்தி | பரமாகாசம் |

காரியகாரணமாயுள்ள இடம்:-

| | |
|---|---|
| பிண்டத்தில் | அண்டத்தில் |
| விந்து | மின்னல் |
| நாதம் | இடி |

➢ மேற்குறித்த பிரகாசமே சபையாகவும் அதன் உள்ளொளியே பதியாகவும் (கடவுளாகவும்) வணங்க வேண்டும்.

➢ கடவுளின் பிரகாசம் எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்திருக்கிறது. இப்பிரகாசத்தின் உள்ளொளியே கடவுள் ஆகும். அந்த உள்ளொளியின் அசைவு (நடம்) ஞானாகாச நடனமென்றும், அசைவுற்றதே நடராஜரென்றும், ஆனந்த நடனமென்றும் சொல்லப்படுகிறது.

## ✧ 25. கடவுளை எந்த அறிவைக் கொண்டு அறிய வேண்டும்? ✧

முதலில் அறிவு வகையறிவோம்;

1 இந்திரிய அறிவு (கண் முதலிய இந்திரியங்கள்)

ஒரு பொருளினது நாம ரூப குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரிய காட்சி, இந்திரிய அறிவாகும்.

2 கரண அறிவு (மனம் முதலிய கரணம்)

அப்பொருளின் நாம ரூபத்தையும் குண குற்றங்களையும் விசாரித்தறிதல் கரணக்காட்சி, கரணமாகிய மன அறிவு.





3. ஜீவ அறிவு

அப்பொருளின் பிரயோஜனத்தை அறிதல் ஜீவக்காட்சி, ஜீவ அறிவு

4. ஆன்ம அறிவு

அந்தப் பொருளினது உண்மையை அறிதல் ஆன்மக்காட்சி ஆன்ம அறிவு.

வள்ளலாரின் சுத்த சன்மார்க்கத்தில் மிக மிக முக்கிய இடம் இது ஆகும். அஃது;

(அறிவிப்பு நாள் 25.11.1872) அகம்புறம் முதலிய எவ்விடத்தும் நீக்கமின்றி நிறைந்து சுத்த மெய்யறிவென்னும் பூரணப் பொதுவெளியில் அறிவார் அறிகின்ற வண்ணங்களும் கருதுவார் கருதுகின்ற வண்ணங்களும் துதிப்பார் துதிக்கின்ற வண்ணங்களும் விளங்குகின்றவர் கடவுள்.

நிற்க!

மேற்ப்படியாக அவரவர் அறிவைக் கொண்டு அறியும் வண்ணம், கருதும் வண்ணம் துதிக்கும் வண்ணம் தோன்றுகின்ற வண்ணங்கள் பல. இவையாவும் இந்திரியக்காட்சி, கரணக்காட்சிகள் ஆகும். இவை உபாய ஞானம். உண்மை ஞானம் இல்லை. ஆனால் கடவுளின் உண்மை திருவண்ணம் உண்மையறிவிலேயே வெளிப்படுவதாக உள்ளது.

சத்திய அறிவால் கடவுளின் உண்மை அறிந்து, அருள் பெறுவதாக உள்ளது. இங்ஙனம் பெற்ற அருளால்தான் மரணம், பிணி, மூப்பு, பயம், துன்பம் முதலிய அவத்தைகளை நீக்கிக் கொள்ளலாம். ஆக, உண்மை அறிவு

தேவை. உண்மையை தெரிவிக்கும் அறிவே ஆன்ம அறிவு. ஆக, ஆன்ம அறிவால் மட்டுமே உண்மை கடவுளை காண முடியும் மற்ற அறிவால் (ஜீவ, கரண, மன) அறியப்படும் கடவுள் விளக்கம் அந்தந்த அறிவு அறியும் வண்ணங்களாய் வெளிப்படுகிறது. இதனால் அவ்வறிவின் அளவுக்கு பிரயோஜனம் மட்டுமே பெறக்கூடுமேயல்லாது ஆன்ம அறிவால் பெறக்கூடிய மரணமில்லா பெருவாழ்வைக் பெற இயலாது என்பதை சத்தியமாக அறியவும். மேலும் இந்திரிய, கரண, ஜீவ அறிவு மூலம் கடவுளின் உண்மையறிய நமக்கு காலமில்லை. முடிபாக திருவருளை, திருவருள் சம்மதத்தால் திருவருட சமூக மிருந்த வண்ணம் அறிந்து கொள்ள வேண்டும் என்பதே வள்ளலாரின் சுத்த சன்மார்க்கம்.

இங்கு திருவருட் சமூகம் என்பது;

ஆன்ம பிரகாசம் (சத்தியஞானசபை)

ஆன்ம அறிவு (உண்மையறிதல்)

கடவுளின் (மெய்பொருளின்) உண்மையறிதல் என்பது "கடவுளின் நிலையறிதல் ஆகும்" இவை படிப்பினால் அறிய முடியாது.

இந்நிலையில் நிலையறிவது எப்படியெனில்;

"ஒழுக்கம் நிரம்பி, கருணையே வடிவாக நிற்கும் விசார சங்கல்பம் உண்டானால், நாம் தாழும்குணம் வரும். அத்தருணத்தில் திருவருள் சத்தி பதிந்து அறிவு விளங்கும். ஆதலால், இடைவிடாது கருணை நன்முயற்ச்சியில் பழகல் வேண்டும்".





உண்மை ஞானத்தை தரும் ஆன்ம அறிவைக் கொண்டு கடவுள் நிலையறிதல் வேண்டும். அப்பொழுது அனுபவ ஞானம் நமக்கு கிடைக்கும்.

## 26. அனைத்தும் தத்துவங்களே.

சமய சன்மார்க்கங்களில் வெளிப்படுத்தப்பட்டிருக்கும் கர்த்தர்கள், கடவுள், மூர்த்திகள், தேவர், யோகி ஆகியோர் தத்துவங்களே! புராணம் முதலியவற்றின் உண்மையும் தத்துவ சம்மாரங்களே. இவையில் தத்துவங்களின் காலப் பிரமாண பரியந்தமிருக்கும்; அதற்கு மேலிரா. பிண்ட லட்சணங்களே தத்துவங்கள்.

அவையாவன;

பை, ஜலம், ஆவி, நாடிகள், அக்கினி, மூலாக்னி, காரணாக்கினி, நரம்பு, சத்திகள், தொழில்கள் ஆகும். இவற்றை அண்டத்திலும் காட்டுகிறார்கள். அண்டமாகிய கழுத்துக்கு மேல் சிரத்திலும் இவை உள்ளன. இங்ஙனமாக 96 தத்துவமாய் பிண்டவடிவாய் உள்ளது. உலகில் காணும் சமய, மார்க்கங்கள் அனைத்தும் மேற்படி கலைகளையே (தத்துவங்களையே) வழங்குகின்றன. ஆனால்,

- சுத்தசன்மார்க்கத்தில் மேற்படி எல்லாத் தத்துவங்களுக்கும் எல்லாத் தத்துவிகளுக்கும் அப்பால் அப்பாலாய் விளங்கும் ஓர் சுத்த ஞான வெளியில் தமக்கு ஒருவிதத்தாலும் ஒப்புயர்வு சிறிதும் குறிக்கப்படாத தனிப்பெருந்தலைமை பதியாகிய

உண்மைக் கடவுளை குறித்தே விளம்புகிறது. சுத்த சன்மார்க்கத்தில் சமய, மத அனுபவங்களைக் கடந்து விளங்குகிறது. இம்மார்க்கத்திற்கு சமய, மத மார்க்கங்கள் அல்லாதனவேயன்றி இல்லாதவனல்ல. ஆன்மாவுக்கு அருள் எப்படி அநந்நியமோ, அதுபோல சுத்தசன்மார்க்கத்திற்குப் பூர்வத்தில் சொன்ன சன்மார்க்கங்கள் யாவும் அநந்நியம் (அந்நியமல்ல)

➢ எல்லா சமய, மத மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியாக விளங்கும் சுத்த சன்மார்க்கத்திலேயே நம் வள்ளலாரை இனி வெளிப்படுத்துவோம்.

ஆம். இனி நாம் சுத்த சன்மார்க்க நெறியிலேயே பற்று வைத்து பேரின்ப பெருவாழ்வில் வாழ்வோம்.

வாரீர்.. வாரீர்.. வாரீர்..

## 27.“வினை” சுத்தசன்மார்க்கத்தில் உண்டா?

நாம் பலரிடம் பேசும்போது சொல்வார்கள்; ஏன்பா! அது எல்லாம் கரும வினைப்பயன். அதை நாம் அனுபவித்துதான் ஆகணும். வினையை யாராலும் அறுக்க முடியாது என்பார்கள்.

அன்பர்களே, இப்படி சொல்பவர்களிடமிருந்து விலகியிருப்பது நலம். வள்ளலார் கண்ட சுத்த சன்மார்க்கத்தில் “வினை”க்கு இடமே இல்லை. வினை எதுவென்றால் அவை;

➢ அறிவில்லாத எண்ணம்,

➢ அறிவில்லாத சொல்,





➢ அறிவில்லாத செயல் ஆகும்.

இவ்வினையானது நம்மிடமுள்ள மதியில் கலந்து நம்மை கலங்க வைத்து விடும்.

என் மார்க்கம் “அறிவு மார்க்கம்” என்கிறார் வள்ளலார். அறிவு உள்ள இடத்தில் வினைக்கு வேலையில்லை. இங்கு (சுத்த சன்மார்க்கத்தில்) மனம் வாக்கு தேகம் இவை மூன்றும் நேர் நிற்கும். இதற்கு ஒரே காரணம் இவர்கள் சுத்தசன்மார்க்கத்தார்கள் ஒழுக்கம் நிறைந்தவர்கள். கருணை ஒன்றையே சாதனமாகக் கொண்டியிருப்பவர்கள். ஒருவராகிய கடவுளையே தொழும் கடமை கொண்டவர்கள். விசேஷ நன்முயற்சியால் அறிவை வளர்த்து உண்மையை அறியக்கூடியவர்கள்.

ஆக, ஒழுக்கம் நிரப்புவர்களிடத்தில் ‘வினை’க்கு ஏது வேலை? சுத்த சன்மார்க்கத்தார்கள் வேற்றுரைக்க மாட்டார்கள். மதியுடையாரை “வினை” ஒட்டாது.

கற்பனையான பொய்யான எதிலும் லட்சியம் வையாது உண்மை அறிய நல்ல விசாரணை செய்யும் சுத்த சன்மார்க்கத்தில் “வினை”க்கு இடமில்லை.

மொத்தத்தில்,

➢ ஓர் உண்மைக் கடவுள் ஒருவரே என்று எண்ணுபவர்களிடத்திலும்

➢ உண்மை அன்பால் வழிபாடு செய்பவர்களிடத்தும்

➢ சாதி, சமய, மத கட்டுப்பாட்டு ஆசாரங்களை விட்டொழித்தவர்களிடத்தும்

➢ மெய்நெறியாம் சுத்த சன்மார்க்கத்தை மட்டுமே பின்பற்றுபவர்களிடம் வல்வினை அற்று போகும்

- கரும வினையும் (கடந்த காலம்) தொடர்பு வினையும் (நிகழ் காலம்) அனுபவ வினையும் (எதிர்காலம்) சுத்த சன்மார்க்கத்தில் (அறிவு மார்க்கத்தில்) கிடையாது என்பதை சத்தியமாக அறியவும்.

வள்ளலார் பாடல்கள்:

- "மதிகலந்து கலங்க வைத்த விதியை நொந்தையோ மனம் அலை பாய்வதுகாண் மன்றில் நடந்தரசே"
- "விதியுடையார் ஏத்தநின்ற துதியுடையார் ஞான விளக்கனைய மெய்யுடையார் வெய்யவினை அறுத்த மதியுடையார் தமக்கருளும் வண்கை பெரிதுடையார்"
- "கொள்கை வினைக் கூட்டுறவால் கூட்டியபல் சமயம்"
- "முன்சொலும் ஆறொனறு பின் சொல்வதொன்றாய் மூட்டுகின் றீர்வினை மூட்டையைக் கட்டி"
- "வேற்றுரைத்து வினைப்பெருக்கி மெலிகின்ற உலகீர்"

## 28. ஐம்மலங்கள் எவை? அவையை எதனால் வெல்ல முடியும்?

வள்ளலார்க்கு ஆண்டவரே அறிவித்த மரபு நான்கில் ஒன்று;

"மலம் ஐந்தும் வென்ற வல்லபமே தனித்த பூரணவல்லபம்."

இங்கு மலம் ஐந்து அவையாவன;





1) ஆணவம்
2) கன்மம்
3) மாயை
4) மாமாயை
5) திரோதயி

அவை முறையே

1) காரிருள்
2) வினை
3) மயக்கம்
4) உள்மயக்கம்
5) மறைப்பு ஆகும்.

இங்கு ஆணவம் இயற்கையானது. கன்மம் செயற்கையானது. மேற்படியான மலங்களிலிருந்து நாம் விடுபட வேண்டும். மேற்படியான மலங்களிலிருந்து விடுபட வேண்டுமானால் "உண்மை"யை அறிய வேண்டும். "உண்மைக் கடவுளை" நினைந்து உணர்ந்து நெகிழ்ந்து உண்மை அன்பால் வழிபாடு செய்ய வேண்டும்.

நிற்க! உண்மையை அறிவதற்கு முன், நமக்கு விதிக்கப்பட்ட, நம்மை கட்டுப்படுத்தும் பொய்யான, கற்பனையான, சாதி, சமய ஆசாரங்களை விட்டொழிக்க வேண்டும் என்கிறார் வள்ளலார்.

ஆக, மெய்நெறி சார்ந்து, சமய விகற்பங்களை நீக்குவதின் மூலம் மலங்களை நீக்கிக் கொள்ளலாம். இறை உண்மையை நமக்கு தெரியவெட்டாது மறைக்கும் திரைகளை விசேஷ நன்முயற்ச்சியால் அதாவது இடைவிடாது "கருணையை" நன்முயற்ச்சியில் பழகுவதின் மூலம் நீக்கிக் கொள்ளலாம் என்ற உண்மையை வெளிப்படுத்தியவர் வள்ளலாரே.

நிற்க! சமயமத மார்க்கங்களில் மலங்களை நீக்க சொல்லப்பட்டிருக்கும் முறைகள் அவையாவன ;

தவம், தியானம், மூச்சுப்பயிற்ச்சி, விரதம் உட்பட பல முறைகள் உள்ளன. அப்பயிற்சிகளுக்கு பல வருடகணக்கில் காடு மலை எனச் செல்வர் எல்லாராலும் இப்பயிற்ச்சியை செய்துவிடமுடியாது.

ஆனால் சுத்தசன்மார்க்கத்தில் மனுஷ்யத் தரத்திலேயே "வழி" காட்டப்பட்டுள்ளது. அவ்வழியில் சமய விகற்பங்களை முதலில் நீக்கிக் கொள்ள வேண்டும். பொது நோக்கத்தை வருவித்துக் கொள்ள வேண்டும். காம, குரோதங்கள் ஏற்படும் காலத்தில் ஞான அறிவினால் தடுத்துக் கொள்ள வேண்டும். கடவுளின் நிலைக்கான நல்ல விசாரணை செய்ய வேண்டும்.

**அவ்வளவே! வாரீர், வாரீர் இன்றே சேர்வீர்**
**சுத்த சன்மார்க்கத்தில்.**

**பாடல்:**

தடையா தினிஉள் மூலமலத்தின்
தடையும் போயிற்றே
சமய விகற்பம் எல்லாம் நீங்கிச்
சமம தாயிற்றே. –வள்ளலார்.

## ✧29. "இவையா உண்மைக் கடவுள்"?✧

உலகில் எத்தனையோ சமய, மத மார்க்கங்கள் உள்ளது. அவரவர் பிறந்த இடத்தின் அடிப்படையில் அல்லது அவரவர் அறிவு ஒழுக்கத்திற்கு ஏற்றவாறு சமய, மத மார்க்கங்களை தழுவி உள்ளோம்.





எந்தவொரு மார்க்கமும் தீயதைச் சொல்லவில்லை. நல்லதையே வியம்புகின்றன அதே நேரத்தில் "கடவுளின் உண்மை" குறித்த விசயத்தில் மட்டுமே வேறுபடுகின்றன. தத்துவங்களின் அடிப்படையில் மற்றும் ஞானிகள், தேவர்கள் தலைவர்கள் கண்ட உண்மையளவில் நெறிகள் வரையறுக்கப்பபட்டுள்ளது. நாம் ஒவ்வொருவரும் உண்மைக் கடவுளின் நிலையை உண்மையறிவால் அறிந்து உணர்ந்து அனுபவிக்க வேண்டும். எப்படி நமது வயிற்று பசிக்கு அவரவர் சாப்பிட்டு அவரவர் வயிற்றை நிரப்புவது போல், கடவுளின் உண்மையை அவரவர் ஆன்ம அறிவை கொண்டு விசாரித்து, அறிந்து, அவரவரே அனுபவிக்க வேண்டும்.

நிற்க! இங்கு ஆன்மா என்றால் என்ன? என்று குழப்பிக் கொள்ள வேண்டாம்.

பிண்டத்தின் அகம் 'ஆன்மா' (உ.ந.பகுதி.345)

ஒரு பொருளினது உண்மையை அறிதல் ஆன்ம அறிவு ஆகும். அதே போல்; பிண்டத்தின் அகப்புறம் ஜீவன் ஒரு வஸ்துவின் பிரயோஜனத்தை அறிவது ஜீவறிவு ஆகும். பிண்டத்தின் புறம் "கரணம்"ஒரு வஸ்துவின் நாமரூபத்தையும் குண குற்றங்களையும் விசாரித்தறிதல் கரணமாகிய மனஅறிவு ஆகும். பிண்டத்தில் புறப்புறம் கண் முதலிய இந்திரியங்கள் ஒரு பொருளினது நாம ரூப குண குற்றங்களை விசாரியாமல் அந்தப் பொருளைக் காணுதல் இந்திரிய அறிவு ஆகும். மேற்படியான நான்கிடத்திலும் காரியத்தால் கடவுளின் பிரகாசம் உள்ளது.

நிற்க! இது மிக முக்கியமான இடமாகும் நம் வள்ளலார் பெரும்பதியாகிய இறைவனை ஆன்ம அறிவைக்

கொண்டே விசாரித்து கடவுளின் நிலை அறிந்து அனுபவம் பெறச் சொல்கிறார்கள்.

உண்மையறிதலிலே உண்மைக்கடவுளை காண முடியும். நம் வள்ளலார் நேரிடையாகவே நம்மை அகத்தினுள் (பொற்சபையினுள்) அழைத்துச் செல்கிறார்கள். இவ்வழியே சுத்தசன்மார்க்கம் ஆகும்.

அன்பர்களே! சிறிது யோசியுங்கள் உலகில் காணும் சமய மத மார்க்கங்கள் யாவும் "பொறிகரண" மூலமாகவே கடவுளை நோக்கி பயணிக்கிறது. ஆக கடவுளை காண்பது வேறு, கடவுளால் தோற்றுவிக்கப்பட்ட லட்சணங்கள் வேறு.

கடவுளால் படைக்கப்பட்ட லட்சணத்தை கடவுளிடத்திலிருந்து பிரித்துச் சொல்வதாக இங்கு கருதக்கூடாது. இறைவன் பரிபூரணமாக பிரகாசமாக எங்கும் இருப்பவன். அதே நேரத்தில் இந்திரிய அறிவால் கரண அறிவால் கடவுளின் நிலையை நாம் காண்பது என்பது இப்பிறவியில் நமக்கு சாத்தியமில்லை என்ற உண்மையை காண்கிறார் வள்ளலார். பல லட்சப்பிறவிகள் எடுத்து ஆன்ம அறிவுக்கு நம் பயிற்சி சென்றப்பிறகே அது சாத்தியமாகுகிறது.

யோகிகளால் மட்டுமே கடுந்தவத்தால் இறை உண்மையை காண வழிவகை இருந்தது. மனுஷ்ய தரத்தில் எந்தொரு வழியும் எவராலும் கண்டு வெளிப்படுத்தபடவில்லை. மனிதப்பிறவி எடுத்த எல்லோராலும் உண்மைக் கடவுளின் நிலைகண்டு அருள்பெறும் வழியை வள்ளலார் கண்டு வெளிப்படுத்தினார்கள்.

சமய மார்க்கங்களில் பிண்ட லட்சணத்தையே வெளிக்காட்டி அதற்குரிய பூரணர்களையே பல கடவுளாக்கி நம்மை வணங்க வைத்து உள்ளனர் என்பதை நேரிடையாக





இங்கு தெரிந்துக்கொள்ள வேண்டும். நாம் வணங்கும் சமயக் கடவுள்கள் அனைத்தும் தத்துவ சம்மாரங்களே என அறிக!

அதாவது;

பூத தோற்றங்களையும், பொறிகரணங்களையும், தெய்வங்களாக்கி இவைகளின் குணங்களையும், தொழிலறிவையும் அதனதன் இடங்களையும் அதனதன் சத்திகளையும் நமக்கு விளக்கி காட்டி உள்ளனர். மெய்பொருளாகிய அந்த ஒரே உண்மைக் கடவுளை நம்மை சிந்திக்கவிடாமல் செய்துவிட்டார்கள் என்பதை நாம் எப்போது அறிவோம்?

பிண்டத்தில் காட்டிய தத்துவங்களை புறங்கவிய வெளியே அண்டத்திலும் காட்டி அவைக்கும் இடங்களை அமைத்து மேற்படி தத்துவங்களுக்கு வடிவம் ரூபம் கொடுத்து உண்மையாக இருப்பதாகச் சொல்லியிருப்பதை என்று நாம் அறிவோம்?

அய்யகோ!

தெய்வத்தினுடைய உண்மையை தெரியவொட்டாது மண்ணைப் போட்டு மறைத்து விட்டதை நாம் எப்பொழுது அறிவோம்?

பிண்டலட்சணத்தை அதாவது ;

தேகத்தில் அமைந்துள்ள

- ➢ பைகளையும்
- ➢ இந்திரியத்தையும்
- ➢ ஆவியையும்
- ➢ நாடியையும்

- அக்கினியையும்
- பால் போன்ற ஜலத்தையும்
- நரம்பையும்
- சத்தியையும்
- அக்னியையும்
- இருதயத்தையும்
- விந்துஸ்தானத்தையும்
- நாதத்தையும்

பல தெய்வங்களாக காட்டியுள்ளனர் என்பதை எப்பொழுது அறியப்போகிறோம்?

மேற்குறித்த அனைத்துமே பிண்ட லட்சணமாகும்.

இவையா உண்மைக் கடவுள் ?

தயவை விருத்தி செய்வதற்குத் தடையாயிருப்பன சமய ஏற்பாடு ஜாதியேற்பாடு முதலிய கட்டுப்பாட்டு ஆசாரங்கள். அவையாவன; ஜாதி ஆசாரம், குலாசாரம், ஆசிரம ஆசாரம், லோகாசாரம் தேசாசாரம், கிரயாசாரம், சமயாசாரம், மாதாசாரம், மரபாசாரம், கலாசாரம், சாதனாசாரம், அந்தாசாரம், சாஸ்திராசாரம், முதலிய ஆசாரங்கள். ஆதலால் மேற்குறித்த ஆசாரங்கள் ஒழிந்து, சுத்த சன்மார்க்க சத்திய ஞான ஆசாரத்தை வழங்கி பொதுநோக்கம் வந்தால், மேற்படி காருண்யம் விருத்தியாகி கடவுளருளைப் பெற்று, அனந்த சித்தி முத்திகளைப் பெறக்கூடுமேயல்லாது இல்லாவிடில் கூடாது. - **வள்ளலார்**





**வள்ளலார் அவர்தம் அக அனுபவத்தில் கண்ட கடவுளின் நிலையை கீழ்வரும் பாடல்களில் குறிப்பிட்டுள்ளார்கள்.**

அகரநிலை விளங்குசத்தர் அனைவருக்கும் அவர்பால்
அமர்ந்தசத்தி மாரவர்கள் அனைவருக்கும் அவரால்
பகரவரும் அண்டவகை அனைத்தினுக்கும் பிண்டப்
பகுதிகள்அங் கனைத்தினுக்கும் பதங்கள்அனைத் தினுக்கும்
இகரமுறும் உயிர்எவைக்கும் கருவிகள்அங் கெவைக்கும்
எப்பொருட்கும் அனுபவங்கள் எவைக்கும்முத்தி எவைக்கும்
சிகரமுதல் சித்திவகை எவைக்கும்ஒளி வழங்கும்
திருச்சிற்றம் பலந்தனிலே **தெய்வம்ஒன்றே கண்டீர்.**

வண்ணமிகு பூதவெளி பகுதிவெளி முதலா
வகுக்குமடி வெளிகளெலாம் வயங்குவெளி யாகி
எண்ணமுறு மாமவுன வெளியாகி அதன்மேல்
இசைத்தபர வெளியாகி இயல்உபய வெளியாய்
அண்ணுறுசிற் பரவெளியாய்த் தற்பரமாம் வெளியாய்
அமர்ந்தபெரு வெளியாகி அருளின்ப வெளியாய்த்
திண்ணமுறும் தனிஇயற்கை உண்மைவெளி யான
திருச்சிற்றம் பலந்தனிலே **தெய்வம்ஒன்றே கண்டீர்.**

சார்பூத விளக்கமொடு பகுதிகளின் விளக்கம்
தத்துவங்கள் விளக்கமெலாந் தருவிளக்க மாகி
நேராதி விளக்கமதாய்ப் பரைவிளக்க மாகி
நிலைத்தபரா பரைவிளக்க மாகிஅகம் புறமும்
பேராசை விளக்கமதாய்ச் சுத்தவிளக் கமதாய்ப்
பெருவிளக்க மாகிஎலாம் பெற்றவிளக் கமதாய்ச்
சீராட விளங்குகின்ற இயற்கைவிளக் கமதாம்
திருச்சிற்றம் பலந்தனிலே **தெய்வம்ஒன்றே கண்டீர்.**

இடம்பெறும்இந் திரியஇன்பம் கரணஇன்பம் உலக
இன்பம்உயிர் இன்பம்முதல் எய்தும்இன்ப மாகித்
தடம்பெறும்ஓர் ஆன்மஇன்பம் தனித்தஅறி வின்பம்
சத்தியப்பே ரின்பம்முத்தி இன்பமுமாய் அதன்மேல்
நடம்பெறுமெய்ப் பொருள்இன்பம் நிரதிசய இன்பம்
ஞானசித்திப் பெரும்போக நாட்டரசின் பமுமாய்த்
திடம்பெறஓங் கியஇயற்கைத் தனிஇன்ப மயமாம்
திருச்சிற்றம் பலந்தனிலே **தெய்வம்ஒன்றே கண்டீர்.**

எல்லாந்தான் உடையதுவாய் எல்லாம்வல் லதுவாய்
எல்லாந்தான் ஆனதுவாய் எல்லாந்தான் அலதாய்ச்
சொல்லாலும் பொருளாலும் தோன்றும்அறி வாலும்
துணிந்தளக்க முடியாதாய்த் துரியவெளி கடந்த
வல்லாளர் அனுபவத்தே அதுஅதுவாய் அவரும்
மதித்திடுங்கால் அரியதுவாய்ப் பெரியதுவாய் அணுவும்
செல்லாத நிலைகளினும் செல்லுவதாய் விளங்கும்
திருச்சிற்றம் பலந்தனிலே **தெய்வம்ஒன்றே கண்டீர்.**

அயர்வறுபே ரறிவாகி அவ்வறிவுக் கறிவாய்
அறிவறிவுள் அறிவாய்ஆங் கதனுள்ளோர் அறிவாய்
மயர்வறும்ஓர் இயற்கைஉண்மைத் தனிஅறிவாய்ச் செயற்கை
மன்னும்அறி வனைத்தினுக்கும் வயங்கியதா ரகமாய்த்
துயரறுதா ரகமுதலாய் அம்முதற்கோர் முதலாய்த்
துரியநிலை கடந்ததன்மேல் சுத்தசிவ நிலையாய்
உயர்வுறுசிற் றம்பலத்தே எல்லாந்தா மாகி
ஓங்குகின்ற தனிக்கடவுள் **ஒருவர்உண்டே கண்டீர்.**

அண்டம்எலாம் பிண்டம்எலாம் உயிர்கள்எலாம் பொருள்கள்
ஆனஎலாம் இடங்கள்எலாம் நீக்கமற நிறைந்தே
கொண்டஎலாங் கொண்டஎலாம் கொண்டுகொண்டு மேலும்
கொள்வதற்கே இடங்கொடுத்துக் கொண்டுசலிப் பின்றிக்
கண்டமெலாங் கடந்துநின்றே அகண்டமதாய் அதுவும்





கடந்தவெளி யாய்அதுவும் கடந்ததனி வெளியாம்
ஒண்தகுசிற் றம்பலத்தே எல்லாம்வல் லவராய்
ஓங்குகின்ற தனிக்கடவுள் **ஒருவர்உண்டே கண்டீர்.**

பாரொடுநீர் கனல்காற்றா காயம்எனும் பூதப்
பகுதிமுதல் பகர்நாதப் பகுதிவரை யான
ஏர்பெறுதத் துவஉருவாய்த் தத்துவகா ரணமாய்
இயம்பியகா ரணமுதலாய்க் காரணத்தின் முடிவாய்
நேருறும்அம் முடிவனைத்தும் நிகழ்ந்திடுபூ ரணமாய்
நித்தியமாய்ச் சத்தியமாய் நிற்குணசிற் குணமாய்
ஓர்தருசன் மாத்திரமாம் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் **ஒருவர்உண்டே கண்டீர்.**

இரவிமதி உடுக்கள்முதல் கலைகள்எலாம் தம்மோர்
இலேசமதாய் எண்கடந்தே இலங்கியபிண் டாண்டம்
பரவுமற்றைப் பொருள்கள்உயிர்த் திரள்கள்முதல் எல்லாம்
பகர்அகத்தும் புறத்தும்அகப் புறத்துடன்அப் புறத்தும்
விரவிளங்கும் நீக்கமற விளங்கிஅந்த மாதி
விளம்பரிய பேரொளியாய் அவ்வொளிப்பே ரொளியாய்
உரவுறுசின் மாத்திரமாம் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் **ஒருவர்உண்டே கண்டீர்.**

ஆற்றுவிட யானந்தம் தத்துவா னந்தம்
அணியோகா னந்தம்மதிப் பருஞானா னந்தம்
பேற்றுறும்ஆன் மானந்தம் பரமானந் தஞ்சேர்
பிரமானந் தம்சாந்தப் பேரானந் தத்தோ
டேற்றிடும்ஏ கானந்தம் அத்துவிதா னந்தம்
இயன்றசச்சி தானந்தம் சுத்தசிவா னந்த
ஊற்றமதாம் சமரசஆ னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் **ஒருவர்உண்டே கண்டீர்.**

வகுத்தஉயிர் முதற்பலவாம் பொருள்களுக்கும் வடிவம்
வண்ணநல முதற்பலவாங் குணங்களுக்கும் புகுதல்
புகுத்தலுறல் முதற்பலவாம் செயல்களுக்கும் தாமே
புகல்கரணம் உபகரணம் கருவிஉப கருவி
மிகுந்தஉறுப் பதிகரணம் காரணம்பல் காலம்
விதித்திடுமற் றவைமுழுதும் ஆகிஅல்லார் ஆகி
உகப்புறும்ஓர் சுத்தசிவா னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் **ஒருவர்உண்டே கண்டீர்.**

இயற்கையிலே பாசங்கள் ஒன்றும்இலார் குணங்கள்
ஏதுமிலார் தத்துவங்கள் ஏதுமிலார் மற்றோர்
செயற்கைஇல்லார் பிறப்பில்லார் இறப்பில்லார் யாதும்
திரிபில்லார் களங்கம்இல்லார் தீமைஒன்றும் இல்லார்
வியப்புறவேண் டுதல்இல்லார் வேண்டாமை இல்லார்
மெய்யேமெய் ஆகிஎங்கும் விளங்கிஇன்ப மயமாய்
உயத்தரும்ஓர் சுத்தசிவா னந்தசபை தனிலே
ஓங்குகின்ற தனிக்கடவுள் **ஒருவர்உண்டே கண்டீர்.**

ஒன்றும்அலார் இரண்டும்அலார் ஒன்றிரண்டும் ஆனார்
உருவும்அலார் அருவும்அலார் உருஅருவும் ஆனார்
அன்றும்உளார் இன்றும்உளார் என்றும்உளார் தமக்கோர்
ஆதியிலார் அந்தமிலார் அரும்பெருஞ்சோ தியினார்
என்றுகனல் மதிஅகத்தும் புறத்தும்விளங் கிடுவார்
யாவும்இலார் யாவும்உளார் யாவும்அலார் யாவும்
ஒன்றுறுதாம் ஆகிநின்றார் திருச்சிற்றம் பலத்தே
ஓங்குகின்ற தனிக்கடவுள் **ஒருவர்உண்டே கண்டீர்.**





## சுத்த சன்மார்க்கத்தில் கடைப்பிடிக்க வேண்டிய ஒழுக்கங்கள்

**அறிவிப்பு நாள் : 11.01.1872**



இங்கு (சத்திய ஞான சபை, சத்திய தருமசாலை, சத்திய சங்கத்தில்) வாசிக்க விரும்புகின்றவர்கள் பதினைந்து வயதிற்கு மேற்பட்டவர்களாகி, நல்லறிவு, கடவுள் பக்தி, உயிரிரக்கம், பொது நோக்கம், திரிகரண அடக்கம் முதலிய நற்குண ஒழுக்கங்களையும் உண்மையுரைத்தல், இன்சொல்லாடல், உயிர்க்குபகரித்தல் முதலிய நற்செய்கை ஒழுக்கங்களையும் பெற்று சுத்த சன்மார்க்கத்திற்கு உரியவர்களாகியிருத்தல் வேண்டும்

**–வள்ளலார்**

**சாகா கல்வியால் பெறப்படும் தேகம்:**

- எதனாலும் தடுக்கப்படாத வடிவம்
- எதனாலும் அழியா வடிவம்
- உரு, அரு, உருஅரு, அவை ஒன்றுமில்லா வடிவம்
- அருட்ஜோதி தேகம் – **வள்ளலார்**

## நன்றியுரை

### வள்ளலார் கண்ட சுத்த சன்மார்க்கம் "ஓர் உண்மை பொது நெறியாகும்".



உலகில் பல சமய, மத மார்க்கங்கள் உள்ளன. இவை தோன்றி பல்லாயிரக்கணக்கான ஆண்டுகள் ஆகிறது. தோன்றி மறைந்த மற்றும் இன்றைய ஞானிகள், யோகிகள் தலைவர்கள் மற்றும் நாம் அனைவருமே மேற்படி ஏதோவொரு சமய, மத மார்க்கங்களை தழுவியே இருந்தோம் மற்றும் இருக்கின்றோம். திரு அருட்பிரகாச வள்ளலாரும் சைவ சமயத்தை தழுவி வந்தார்கள். கருணை ஒன்றையே சாதனமாக கொண்டு இடைவிடாது செய்த விசேஷ நன்முயற்ச்சியால் "ஓர் புதிய மார்க்கத்தை" கண்டு வெளிப்படுத்துகிறார்கள். வள்ளலார் அம்மார்க்கத்திற்கு "சுத்த சன்மார்க்கம்" எனப் பெயரிட்டு அழைத்தார் சுத்தசன்மார்க்கம் என்பதற்கு பொருள் யாதெனில்; இருக்கும் சன்மார்க்கங்களை மறுக்க வந்தது என்கிறார் வள்ளலார். தன் மார்க்கத்திற்கு உலகில் காணும் சமய, மத மார்க்கங்களை எக்காலத்தும் முக்கிய தடையாக அறிவித்தார். அதே நேரத்தில் சுத்த சன்மார்க்கத்தின்





நெறியானது உலகில் காணும் எல்லா சமய, மத மார்க்கங்களுக்கும் உண்மை பொது நெறியாக விளங்கும் என்கிறார்கள்.

அன்பர்களே!

இப்புதிய மார்க்கத்தில் கடவுள் யார்?

இம்மார்க்கத்தின் நெறி என்ன?

இம்மார்க்கத்தில் அறிவிக்கப்பட்ட பயன் என்ன?

என்பவற்றை அம்மார்க்கத்தின் நிறுவநனர் வள்ளலாரின் நேரிடையான நூல்களான விண்ணப்பங்கள், திருஅகவல், 28 பாசுரப்பாடல்கள் மற்றும் நெறிசார்ந்த உரைநடைகள் அடிப்படையில் "உள்ளது உள்ளபடி" இந்நூலில் தெரிவிக்கப்பட்டுள்ளது. திரு அருட்பிரகாச வள்ளலாரின் சுத்த சன்மார்க்க நெறியே உண்மையானது உயர்வானது என்று இந்நூலின் மூலம் வெளிப்படுத்த நான் முயற்சிக்கவில்லை. இம்முடிவு அவரவர் பெற்றியிருக்கும் அறிவு ஒழுக்கத்தின்பால் விட்டுவிடுகிறேன். இதுவே உண்மையும் ஆகும். எந்தொரு ஞானி, தலைவர், குருவுக்கும் ஏற்படாத ஒன்று வள்ளலாருக்கு நம்மால் ஏற்படுத்தப்பட்டுள்ளது. அஃது யாதெனில்; வள்ளலாரை அவர்தம் முடிபான "சுத்த சன்மார்க்க" கொள்கையில் வெளிப்படுத்தாமல், அவரால் கைவிடப்பட்ட முந்தைய சமயப் பற்றிலேயே வெளிப்படுத்தியும், சமயப்பற்று காலத்தில் அவரால் இயற்றப்பட்ட சமய ஸ்தோத்திரப் பாடல்கள் மூலமே உலகிற்கு அவரை தொடர்ந்து வெளிப்படுத்தியும் வருகிறோம் இது சரியா?

அவர் லட்சியம் வைத்திருந்த சமய கொள்கையிலிருந்து முற்றிலும் மாறுப்பட்ட கொள்கை கொண்டதே "சுத்த சன்மார்க்கம்" ஆகும். நியாயத்தின் அடிப்படையிலும், சட்டப்படியும், அறிவு ஒழுக்கத்தின் அடிப்படையிலும் வள்ளலாரை அவர்தம் முடிபான நெறியிலேயே வெளிப்படுத்துதலே சரியாகும்.

இந்நூலில் உள்ள எழுத்து இலக்கணப் பிழைகளுக்கு என்னை மன்னித்து, உங்களின் உண்மையறிவால் கடவுளின் உண்மையை உணர்ந்திருப்பீர்கள்.

எல்லா உயிர்களும் இன்புற்று வாழ்க!

அன்புடன் - APJ.அருள்

www.atruegod.org, www.facebook.com/vallalarkarunai,
apjarul1@gmail.com, vallalarkarunai@gmail.com

இதுகாறும் தெய்வத்தின் உண்மையைத் தெரிய வொட்டாது, அசுத்தமாயா காரிகளாகிய சித்தர்கள் மறைத்துவிட்டார்கள். சுத்த மாயா காரியாகிய தெரிந்த பெரியோரும் இல்லை. சன்மார்க்கமும் இல்லை.

**- வள்ளலார்**

நான் முதலில் சைவ சமயத்தில் லக்ஷியம் வைத்துக் கொண்டிருந்தது இவ்வளவு என்று அளவு சொல்லமுடியாது. அந்த லக்ஷியம் இப்போது எப்படிப் போய்விட்டது பார்த்தீர்களா! அப்படி லக்ஷியம் வைத்ததற்கு சாக்ஷிவேறே வேண்டியதில்லை. நான் சொல்லியிருக்கிற - திருவருட்பாவில் அடங்கியிருக்கிற - ஸ்தோத்திரங்களே போதும். ஏன் அவ்வளவு மிகுந்த அழுத்தம் எனக்கு அப்போது இருந்ததென்றால், அப்போது எனக்கு அவ்வளவு கொஞ்சம் அற்ப அறிவாக இருந்தது. இப்போது ஆண்டவர் என்னை ஏறாதநிலைமேல் ஏற்றியிருக்கின்றார். எல்லாவற்றையும் விட்டு விட்டதினால் வந்த லாபம் இது.

**- வள்ளலார்**